# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

## 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டம்

---

[*1991, ஏப்பிறல் மாதம் 19 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது*]

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது

---

*1991, ஏப்பிறல் மாதம் 19 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 1. அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்

**விலை: ரூபா 9.00** **தபாற் செலவு: ரூபா 4.50**

# 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டம்

[1991, ஏப்பிறல் மாதம் 19 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 37/87

**1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, உணவு (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பிடு செய்யப்படும்) 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க, உணவுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) "உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல் அல்லது விநியோகித்தல் ஆகாது." எனவுள்ள சொற்களுக்குப் பதிலாக, "உற்பத்தி செய்தல், இறக்குமதி செய்தல், விற்பனை செய்தல், விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தல், களஞ்சியப்படுத்துதல் அல்லது விநியோகித்தல் ஆகாது." என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "தன்னகத்து அல்லது தன்மேல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தன்னகத்து அல்லது தன்மேல்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) அப்பிரிவின் ஓரக் குறிப்பிலுள்ள "உற்பத்தி, இறக்குமதி, விற்பனை, விநியோகம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உற்பத்தி, இறக்குமதி, விற்பனை, விற்பனைக்கான வெளிக்காட்டல், களஞ்சியம், விநியோகம்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவிலுள்ள "விற்பனைக்காக" என்னும் சொல்லை விட்டுவிடுவதன்மூலமும் ;

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள "சுட்டுத்துண்டு இடுதல், அதனைப் பொதியாக்குதல், பதனிடுதல், பதப்படுத்துதல், விற்பனை செய்தல் அல்லது விளம்பரப்படுத்துதல் ஆகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "பதனிடுதல், பதப்படுத்துதல், பொதியாக்குதல், சுட்டுத்துண்டு இடுதல், விற்பனை செய்தல், களஞ்சியப்படுத்துதல், விற்பனைக்காக வெளிக்காட்டி வைத்தல், இறக்குமதி செய்தல் அல்லது விளம்பரப்படுத்துதல் ஆகாது." என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(2) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(3) பிரதான உணவு அதிகாரி, ஏதேனும் உணவின் சுட்டுத் துண்டு இடுபவருக்கு அல்லது விளம்பரதாரருக்கு கேட்கப்படுவதற்கான சந்தர்ப்பமொன்றை அளித்தபின்னர், இப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளை மீறி அத்தகைய உணவில் சுட்டுத்துண்டு இடுதலை அல்லது அத்தகைய உணவுபற்றி விளம்பரம் செய்தலைத் தடைசெய்யலாம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 5 ஆம் பிரிவிலுள்ள "பிரதான உணவு அதிகாரியின் அல்லது அதற்கென அவரால்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உணவு அதிகாரியின் அல்லது அதற்கென அவ்வதிகாரியினால்" என்னும் சொற்களை இடுகிதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

5. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள "உரிமமளிக்கும்", "வளவுகளுக்கு உரிமமளிக்கப்பட்டிருந்தாலன்றி" என்னும் சொற்களுக்குப் பதிலாக முறையே "பதிவுசெய்யும்", "வளவு பதிவுசெய்யப்பட்டிருந்தாலன்றி" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் இடம்பெறும் "உரிமமொன்றினை", "அவ்வுரிமத்தின்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பதிவுச் சான்றிதழொன்றினை", "அப்பதிவுச் சான்றிதழின்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(இ) அப்பிரிவின் ஓரக் குறிப்பிலுள்ள, "உரிமமளித்தல்" என்னும் சொல்லுக்குப் பதிலாக "பதிவுசெய்தல்" என்னும் சொல்லை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவைத் திருத்துதல்.

6. முதன்மைச் சட்டவாக்கத்தின் 8 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(அ) அந்த உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "சுகாதார சேவைகள் பணிப்பாளர் ;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதி ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அந்த உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில் "சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர் ;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "[சூழல்சார் மற்றும் தொழில்சார் சுகாதார] பணிப்பாளர்," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) அந்த உட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "கொழும்பு மாநகரப் பிரதேசத்தின் நகர இரசாயனப் பகுப்பாய்வாளர் ;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "கொழும்பு மாநகரப் பிரதேசத்தின் நகர இரசாயனப் பகுப்பாய்வாளர் அல்லது நகர இரசாயன உதவிப் பகுப்பாய்வாளர் ;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஈ) அந்த உட்பிரிவின் (ஏ) என்னும் பந்தியில் "இலங்கைக் கட்டளை கள் பணியகத்தைச் சேர்ந்தவருமான" என்னும் சொற்களுக்குப் பதிலாக "இலங்கைக் கட்டளைகள் நிறுவனத்தைச் சேர்ந்தவரு மான" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(உ) அந்த உட்பிரிவின் (ஒ) என்னும் பந்தியில் "உணவியல் நிபுணர் கள் இருவர்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக "உணவியல் நிபுணர்கள் இருவர்; அவர்களுள் ஒருவர் பற்றீரியவியலாளரா தல் வேண்டும்;" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

7. முதன்மைச் சட்டவாக்கத்தின் 10 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத் தின் 10 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அந்தப் பிரிவின் (2) ஆம் உட்பிரிவில்—

(அ) அந்த உட்பிரிவின் (அ) என்னும் பந்தியை நீக்கிவிட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன்மூல மும் :—

"(அ) மாநகரப் பிரதேசமொன்றின் நிருவாக இடப்பரப் புத் தொடர்பில்—

(i) அந்த இடப்பரப்புக்கென அமைக்கப்பட்ட மாநகரசபையாக ; அல்லது

(ii) மாநகரசபையானது உணவு அதிகாரியாக அதன் பணிகளை நிறைவேற்ற முடியாத விடத்து, அந்த இடப்பரப்புக்கான சுகா தார மருத்துவ அலுவலராக,

இருத்தல் வேண்டும் ;"

(ஆ) அந்த உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "அவ் இடப்பரப்புக்கான சுகாதார மருத்துவ அலுவலராதல் வேண்டும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அவ் இடப்பரப்புக்கான சுகாதார மருத்துவ அலுவலராதல் அல்லது பெரும் பாக சுகாதார அலுவலராதல் வேண்டும்." என் னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(2) அந்தப் பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் "சுகாதார சேவைகள் கண் காணிப்பாளர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்" என்னும் சொற்களை இடு வதன் மூலமும்;

8. முதன்மைச் சட்டவாக்கத்தின் 11 ஆம் பிரிவானது இத்தால் பின் வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக் கத்தின் 11 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அந்தப் பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "சுகாதார சேவைகள் பணிப்பாளரே" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையதிபதியே" என்னும் சொற் களை இடுவதன் மூலமும்;

(2) அந்த பிரிவின் (3) ஆம் உட்பிரிவினை உடனடுத்து, பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்—

"(3அ) பிரதான உணவு அதிகாரியானவர், (3) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, அவசர அவசியமான விடயங்களில் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு, இச் சட்டத்தின் எல்லா ஏற்பாடுகளையும் அல்லது அவற்றுள் எதனையும் அல்லது அதன்கீழ் ஆக்கப்பட்ட ஏதேனும் ஒழுங்கு விதிகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக அவர் அவசியமெனக் கருதுகின்றவாறான அத்தகைய பணிப்புரைகளை வழங்கலாம் என்பதுடன், அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரானவர், சுகாதார மருத்துவ அலுவலர் ஒருவரின் அல்லது பெரும்பாக சுகாதார அலுவலர் ஒருவரின் உதவியுடன் அத்தகைய பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத் 13 ஆம் பிரிவைத் திருத்துதல்.

9. முதன்மைச் சட்டவாக்கத்தின் 13 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(அ) "எவரேனும் சுகாதார மருத்துவ அலுவலரை, உணவு அவுடதப் பரிசோதகரை," என்னும் சொற்களுக்குப் பதிலாக "எவரேனும் சுகாதார மருத்துவ அலுவலரை, பெரும்பாக சுகாதார அலுவலரை, உணவு அவுடதப் பரிசோதகரை," என்னும் சொற்களை இடுவதன்மூலமும் ;

(ஆ) "உணவு அதிகாரி ஒருவரின் அதிகாரம் பெற்ற அலுவலராக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உணவு அதிகாரிகளின் அதிகாரம் பெற்ற அலுவலராக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவைத் திருத்துதல்.

10. முதன்மைச் சட்டவாக்கத்தின் 14 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "பொதியாக்கப்படுகின்றது அல்லது களஞ்சியப்படுத்தப்படுகின்றது" என்னும் சொற்களுக்குப் பதிலாக "பொதியாக்கப்படுகின்றது, விற்பனைக்கு வெளிக்காட்டப்படுகின்றது அல்லது களஞ்சியப்படுத்தப்படுகின்றது" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் "சுகாதார மருத்துவ அலுவலராக" என்னும் சொற்களுக்குப் பதிலாக "சுகாதார மருத்துவ அலுவலராக, பெரும்பாக சுகாதார அலுவலராக" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அப்பிரிவின் (4) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் புதிய பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(4அ) இச்சட்டத்தின் நிருவாகம் அல்லது அதை வலுவுக்கிடு தல் தொடர்பாக ஒரு அரசாங்கத் திணைக்களத்திற்கு அல்லது ஒரு நீதிமன்றத்திற்குத் தவிர, (4) ஆம் உடபிரிவின் கீழ் அதிகாரம்பெற்ற அலுவலர் ஒருவரினால் பெறப்பட்ட தகவல் வெளிப்படுத்தப்படுதலாகாது." ;

(3) அப்பிரிவின் (11) ஆம் உட்பிரிவில் "உடனடியாக அறிவித்தல் வேண்டும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக "அறிவித்தல் வேண்டும்," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

11. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1), (2), (3) ஆம் உட்பிரிவுகளில் "அதிகாரி" என்னும் சொல் இடம்பெறும் இடங்களில் எல்லாம் "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்,

(2) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும் :—

"(4) மூன்றும் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நீதிவான், (3) ஆம் உட்பிரிவின்கீழ் நீதிமன்றத்திற்குத் தகவல் கொடுத்துதவப்பட்டதன் பின்னர், விரைவாகவும் இயற்கையாகவும் அழிந்து போகக்கூடிய கைப்பற்றப்பட்ட ஏதேனும் பொருளை, பொருத்தமானதென அவர் எண்ணுகின்ற அத்தகைய முறையில் கையாளும்படி பணிக்கலாம்."

12. முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— முதன்மைச் சட்டவாக்கத்தின் 16 ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "சமர்ப்பித்தல் வேண்டும்.". என்னும் சொற்களுக்குப் பதிலாக "சமர்ப்பிக்கலாம்." என்னும் சொல்லையிடுவதன் மூலம் ;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "இயைபான உணவு அதிகாரிக்கு" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு" என்னும் சொற்களையிடுவதன் மூலமும்.

13. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவு, அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "அங்கீகரிக்கப்பட்ட மேலதிக இரசாயனப் பகுப்பாய்வாளரொருவரை" என்னும் சொற்களுக்குப் பதிலாக "மேலதிக இரசாயன பகுப்பாய்வாளரொருவரை அல்லது அதற்கு மேற்பட்டவர்களை" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவைத் திருத்தல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 18 ஆம் பிரிவானது, இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில்—

(அ) அவ்வுட்பிரிவின் (அ) எனும் பந்தியில் "ஆயிரம் ரூபாவிற்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான" எனும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான" எனும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில் "ஐந்நூறு ரூபாவிற்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான" எனும் சொற்களுக்குப் பதிலாக "ஐயாயிரம் ரூபாவுக்குக் குறையாததும் பத்தாயிரம் ரூபாவுக்கு மேற்படாததுமான" எனும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரிவின் (இ) எனும் பந்தியின் (i) ஆம் உட்பந்தியில் "இருநூற்றம்பது ரூபாவிற்குக் குறையாததும் ஐந்நூறு ரூபாவிற்கு மேற்படாததுமான" எனும் சொற்களுக்குப் பதிலாக, "ஐந்நூறு ரூபாவிற்குக் குறையாததும் மூவாயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான" எனும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(ஈ) அவ்வுட்பிரிவின் (இ) எனும் பந்தியின் (ii) ஆம் உட்பந்தியில் "ஐந்நூறு ரூபாவிற்குக் குறையாததும் ஆயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான" எனும் சொற்களுக்குப் பதிலாக, "ஆயிரம் ரூபாவிற்குக் குறையாததும் ஐயாயிரம் ரூபாவிற்கு மேற்படாததுமான" எனும் சொற்களை இடுவதன் மூலமும்.

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், அவ்வுட்பிரிவின் (ஆ) எனும் பந்தியில்—

(அ) "குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை (ஏதேனுமிருப்பின்)" எனும் சொற்களுக்குப் பதிலாக "குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டவருக்கு வழங்கப்பட்ட உரிமத்தை அல்லது பதிவுச்சான்றிதழை (ஏதேனுமிருப்பின்)" எனும் சொற்களையும்; அத்துடன்

(ஆ) "அதற்கிணங்க இயைபான உரிமமளிக்கும் அதிகாரிக்கு" எனும் சொற்களுக்குப் பதிலாக, "அதற்கிணங்க இயைபான உரிமமளிக்கும் அதிகாரிக்கு அல்லது பதிவு செய்யும் அதிகாரிக்கு" எனும் சொற்களையும்,

இடுவதன் மூலமும் ;

(3) அப்பிரிவின் முடிவில் பின்வரும் புதிய உட்பிரிவைச் சேர்ப்பதன் மூலமும் :—

"(3) (அ) இச்சட்டத்தின் 7(1) ஆம் பிரிவின் நியதிகளின்படி அது தொடர்பாக பதிவுச் சான்றிதழொன்றை முதலில் பெற்றுக்கொள்ளாமல் ஏதேனும் வளவினைப் பயன்படுத்திய தவறுக்குக் குற்றத்தீர்ப்பளிக்

கப்பட்ட ஆள், அத்தகைய குற்றத்தீர்ப்பு எப்படியிருப்பினும், ஒன்றில் அவாராகவே அல்லது அவரின் சார்பில் வேறு எவரேனும் ஆள் மூலமாக அத்தகைய வளவினைத் தொடர்ந்து பயன்படுத்துமிடத்து, நீதிவான், இயைபான உணவு அதிகாரியினால் அல்லது அத்தகைய உணவு அதிகாரியினால் அதிகாரமளிக்கப்பெற்ற எவரேனும் அலுவலரினால் முதற்கட்டளை ஒன்றிற்கான விண்ணப்பம் செய்யப்பட்டதன்மேல், அத்தகைய உணவு அதிகாரியிடமிருந்து அத்தகைய வளவு தொடர்பில் அத்தகைய ஆள் பதிவுச் சான்றிதழொன்றைப் பெறுகின்ற அத்தகைய காலம் வரைக்கும், அத்தகைய வளவினை மூடிவிடுவதற்கு அல்லது அதனகத்துக் கொண்டு நடாத்தப்படும் வியாபாரத்தை அல்லது தொழிலை நிறுத்திவைப்பதற்குக் கட்டளையிடலாம்.

(ஆ) பந்தி (அ) வில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள ஏதேனும் வழக்கு நடவடிக்கையில், இச்சட்டத்தின் 7(1) ஆம் பிரிவினது நியதிகளின்படி அது தொடர்பில் பதிவுச்சான்றிதழொன்றை முதலில் பெற்றுக்கொள்ளாமல் அத்தகைய வளவினை, சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள ஆள் தொடர்ந்து பயன்படுத்துகிறார் எனக் கூறுவதாக, உணவு அதிகாரியினால் அல்லது அவரின் சார்பில் ஒப்பமிடப்பட்ட சான்றிதழொன்று, அதனகத்துக் கூறப்பட்டுள்ள நிகழ்வுகளின் முதற்றோற்றவளவிலான சான்றாதல் வேண்டும்.

(இ) அத்தகைய ஆள் இவ்வுட்பிரிவின் பந்தி (அ) வின் கீழ் கொடுக்கப்பட்ட முடிவுறுத்தற் கட்டளைக்கு இணங்கியொழுகத்தவறுமிடத்து, நீதிவான், அத்தகைய நீதிமன்றத்தின் பிசுக்காலுக்கு, அத்தகைய கட்டளை கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று நாட்களுக்கு முந்தாததும் ஏழு நாட்களுக்குப் பிந்தாததுமான தேதியொன்றாக உள்ள கட்டளையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு தேதிக்கு முன்னதாக, அத்தகைய வளவுகளை மூடிவிடுவதற்கும் அத்துடன் அவற்றினகத்து கொண்டுநடாத்தப்படும் வியாபாரத்தை அல்லது தொழிலை நிறுத்தி வைப்பதற்கும் அத்தகைய பிசுக்காலைத் தேவைப்படுத்துவதும் அத்துடன் அத்தகைய பிசுக்காலுக்கு அதிகாரமளிப்பதும் ஆன ஒரு கட்டளையை உடனடியாக வழங்குதல் வேண்டும். அத்தகைய வளவுகளை மூடிவிடவும் அத்துடன் அவற்றினகத்துக் கொண்டுநடாத்தப்படும் வியாபாரத்தை அல்லது தொழிலை நிறுத்தி வைப்பதற்கும் அவசியமானவர்கள் எனப் பிசுக்கால் கருதக்

கூடியவாறன அத்தகைய ஆட்களுடன் வளவுக்குள் பிரசுக்கால் நுழைவதற்கு அத்தகைய கட்டளை போதிய அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

15. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் பந்தி (ஆ) வை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பந்தியை இடுவதன் மூலம் :—

"(ஆ) அத்தவறு கண்டுபிடிக்கப்பட்ட தேதியிலிருந்து அல்லது மாதிரி எடுக்கப்பட்டிருந்தால் மாதிரி எடுக்கப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவடைந்த பின்னரும்,";

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கெதிரான குற்றச்சாட்டை மீளப்பெறலாம் என்பதுடன்" என்ற சொற்களை விட்டுவிடுவதன் மூலம்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

16. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு அதன் (1) ஆம் உட்பிரிவில் "தமது உட்கருத்துப்பற்றி மூன்று நாட்களுக்குக் குறையாத அறிவித்தலை வழக்குத் தொடுநர் தரப்பிற்குக் கொடுத்ததன் மேலும்," என்ற சொற்களுக்குப் பதிலாக "அழைப்புக் கட்டளை விடுக்கப்பட்ட பின் வழக்கு அழைக்கப்படும் முதலாவது தேதியன்று அல்லது அதற்கு முன் அவருடைய கருத்துப் பற்றி வழக்குத் தொடுநர் தரப்புக்கு அறிவித்தல் கொடுத்ததன் மேலும்" என்ற சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவைத் திருத்துதல்.

17. முதன்மைச் சட்டவாக்கத்தின் 23 ஆம் பிரிவு அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் "அவரைக் கட்டளைவிட்டழைப்பதற்கான செலவுகளை அக்கட்சிக்காரர் நீதிமன்றத்துக்குச் செலுத்துவதன் மேல்" என்ற சொற்களுக்குப் பதிலாக "அவருக்குக் கொடுபடக்கூடியனவும், விதித்துரைக்கப்படக் கூடியனவுமான அத்தகைய கட்டணங்களும் உட்படுவதாக அவரைக் கட்டளைவிட்டழைப்பதற்கான செலவுகளை அக்கட்சிக்காரர் நீதிமன்றத்தில் வைப்பிலிடுவதன்மேல்" என்ற சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவைத் திருத்துதல்.

18. முதன்மைச் சட்டவாக்கத்தின் 24 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் "குற்ற வழக்குத் தொடரப்படும் நேரத்தில்" என்ற சொற்களுக்குப் பதிலாக "விசாரணையின் தொடக்கத்தில்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

19. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பந்தி (அ) வில் "விற்பனைக்கு முன்வைக்கப்படின், வெளிக் காட்டி வைக்கப்படின் அல்லது வைத்திருக்கப்படின்" என்ற சொற்களுக் குப் பதிலாக "விற்பனைக்கு முன் வைக்கப்படின், வெளிக்காட்டிவைக்கப் படின், களஞ்சியப் படுத்தப்படின் அல்லது வைத்திருக்கப்படின்" என்ற சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

20. முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவு இத்தால் நீக்கப் பட்டு, அதற்குப் பதிலாகப் பின்வரும் புதிய பிரிவு இடப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 29 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

"இச்சட்டத்தின்கீழ் உள்ளூரதிகாரசபை நிதியத்துக்கும் நிதியத்திலிருந்தும் செய்யப்பட்ட கொடுப்பனவுகள்.

29. (1) (அ) இச்சட்டத்தின்கீழான அல்லது அதன் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின்கீழான ஒரு தவறு தொடர்பாக, ஓர் உள்ளூர் அதிகாரசபையாகிய உணவு அதிகாரசபை ஒன்றின் அதிகாரமளிக்கப்பட்ட ஓர் அலுவலரால் தொடரப்பட்ட குற்ற வழக்கில் கொடுக் கப்பட்ட அல்லது அறவிடப்பட்ட குற்றப் பணங்கள் உள்ளூர் அதிகாரசபையின் நிதியத்துக்குச் செலுத்தப் படல் வேண்டும் ;

(ஆ) இச்சட்டத்தை நிர்வகிப்பதில் அத்தகைய உள்ளூர் அதிகாரசபையால் உறப்பட்ட செலவுகள் உள்ளூர் அதிகாரசபையின் நிதியத்திலிருந்து செலுத் தப்படல் வேண்டும்.

(2) இச்சட்டத்தின்கீழான தவறொன்றுக்குத் தவ றாளி ஒருவர் எந்நீதிமன்றத்தின் முன்னிலையில் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டாரோ அந்நீதிமன்றம், அவ்வாறான தவறுக்கு விதிக்கப்படக்கூடியதான ஏதேனும் குற்றப் பணம் தொடர்பில், அறவிடப்பட்ட குற்றப்பணத்தின் இருபத்தைந்து சத வீதத்தை விஞ்சாத ஒரு பணத் தொகை அத்தகைய குற்றத்தீர்ப்பினைப் பெற்றுக் கொடுக்கும் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலருக்கு சன் மானமாகக் கொடுக்கப்படல் வேண்டுமெனப் பணித் தல், அந்நீதிமன்றத்திற்குச் சட்டமுறையானதாதல் வேண்டும்.".

21. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவு "சுகாதார சேவை கள் கண்காணிப்பாளருக்கு அல்லது அந்த இடப்பரப்பிற்கான சுகாதார மருத்துவ அலுவலருக்கு" என்ற சொற்களுக்குப் பதிலாக "பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு, அந்த இடப்பரப்புக்கான சுகா தார மருத்துவ அலுவலருக்கு அல்லது பெரும்பாக சுகாதார அலு வருக்கு" என்ற சொற்களை இடுவதன் மூலமும் இத்தால் திருத்தப்படு கின்றது. முதன்மைச் சட்டவாக்கத்தின் 30 ஆம் பிரிவைத் திருத்துதல்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவைத் திருத்துதல்.

22. முதன்மைச் சட்டவாக்கத்தின் 32 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஐ) என்னும் பந்தியில், அதன் (i) ஆம் உட்பந்தியில் "உரிமங்கள்" என்ற சொற்களுக்குப் பதிலாக "பதிவுச்சான்றிதழ்கள்" என்ற சொல்லையும் (ii) ஆம் உட்பந்தியில் "உரிமங்களுக்கான" என்ற சொல்லுக்குப் பதிலாக "பதிவுச் சான்றிதழுக்கான" என்ற சொல்லையும் (iii) ஆம் உட்பந்தியில் 'உரிமம்' என்ற சொல்லுக்குப் பதிலாக 'பதிவுச்சான்றிதழ்' என்ற சொல்லையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவைத் திருத்துதல்.

23. முதன்மைச் சட்டவாக்கத்தின் 33 ஆம் பிரிவு "உள்ளூராதிகார சபை" என்ற வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"உள்ளூராதிகாரசபை" என்பது ஏதேனும் மாநகரசபை, நகரசபை, அபிவிருத்திசபை அல்லது பிரதேச சபை எனப் பொருளாவதுடன் அத்தகைய ஏதேனும் சபையினால் பிரயோகிக்கப்படும் தத்துவங்களையும் நிறைவேற்றப்படும் பணிகளையும் புரியப்படும் கடமைகளையும் நேரொத்த அல்லது அவைபோன்ற தத்துவங்களைப் பிரயோகிப்பதற்கெனவும் கடமைகளைப் புரிவதற்கெனவும் ஏதேனும் சட்டத்தினால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டுத் தாபிக்கப்பட்ட ஏதேனும் அதிகார சபையையும் உள்ளடக்கும்;".

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

24. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.